13112

 සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

AL/2013/32/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

32 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள்:**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள **இடைவெளியில்** உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் **பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து, **அதன் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் **சுருக்கமான விடைகளைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் 02 புள்ளிகள் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| வினாத்தாள் I இற்காக | | | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|---|---|
| வினா இல. | புள்ளிகள் | 1 வது பரீட்சகர் | | |
| 01 - 30 | | 2 வது பரீட்சகர் | | |
| 31 - 50 | | மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| | | பிரதம பரீட்சகர் | | |
| மொத்தம் | | எண்கணிதப் பரீட்சகர் | | |

1. வணிகம் ஒன்றின் அடிப்படை
   (1) பணம் ஆகும். (2) பொருட்கள், சேவைகள் ஆகும.
   (3) இலாபம் ஆகும். (4) வாடிக்கையாளர் ஆகும்.
   (5) உள்ளீடுகளும், வெளியீடுகளும் ஆகும். (......)

2. நவீன தொழினுட்ப மீன்பிடித்தல் உபகரணங்களுடன் கூடிய படகுகளைப் பயன்படுத்தும் வகையில் கொண்டமைந்துள்ள ஆழ்கடல் மீன்பிடித்தலானது ஒரு
   (1) முதனிலை உற்பத்தி ஆகும். (2) இரண்டாம்நிலை உற்பத்தி ஆகும்.
   (3) மூன்றாம்நிலை உற்பத்தி ஆகும். (4) பாய்ச்சல் உற்பத்தி ஆகும்.
   (5) கட்டளை உற்பத்தி ஆகும். (......)

3. பின்வருவன இயற்கைச் சூழலில் காணப்படும் வரையறுக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்கதும், வரையறுக்கப்பட்ட புதுப்பிக்கத் தகாததுமான சில வளங்களாகும்.
   A – காடு  B – வைரம்  C – மீன்
   D – நிலக்கரி  E – உணவு  F – பெற்றோலியம்
   மேற்கூறப்பட்டவற்றுள் வரையறுக்கப்பட்ட **புதுப்பிக்கத் தகாத** வளங்கள்
   (1) A, B, C, D, E ஆகும். (2) A, B, D, E ஆகும். (3) A, C, D ஆகும்.
   (4) B, C, F ஆகும். (5) B, D, F ஆகும். (......)

4. "வணிகத்தின் சமூகப்பொறுப்பு" என்ற எண்ணக்கருவானது
   (1) வணிகமானது சட்டத்தின் பிரகாரம் தொழிற்பட வேண்டும் என்ற கருத்தாகும்.
   (2) வணிகமானது பங்குதாரரது குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்தாகும்.
   (3) வணிகமானது தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பங்குதாரரது குறிக்கோள்களைக் கருத்திற் கொள்ளத் தேவையில்லை என்ற கருத்தாகும்.
   (4) வணிகமானது தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அக்கறையுடைய தரப்பினரின் குறிக்கோள்களைக் கருத்திற் கொள்ள வேண்டும் என்ற கருத்தாகும்.
   (5) வணிகமானது தீர்மானங்களை மேற்கொள்ளும் போது வாடிக்கையாளரது தேவைகளையும் விருப்பங்களையும் கருத்திற் கொள்ள வேண்டும் என்ற கருத்தாகும். (......)

5. அரசாங்க நாணயக் கொள்கையின் மூலம் கட்டுப்படுத்தப்படும் ஒரு நடவடிக்கை
   (1) வட்டி மற்றும் பணநிரம்பல் (2) வரிகள் மற்றும் கட்டணங்கள்
   (3) மீண்டெழும் செலவு (4) மூலதனச் செலவு
   (5) அரச வருமானம் மற்றும் செலவு (......)

6. உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான சர்வதேச நியமம் எது ?
   (1) ISO 9001: 2008 (2) ISO 14001: 2004 (3) ISO 22000: 2005
   (4) ISO 27000 (5) OHSAS 18001: 2007 (......)

(பக். 2 ஐப் பார்க்க

7. "வரையறுத்த பொறுப்பு" மூலம் பெறப்படும் பெறுபேறு
   (1) உடைமையாளர்களது இடர் அவர்களால் முதலீடு செய்யப்பட்ட பணம் மட்டுமல்ல அவர்களது சொந்தச் சொத்துக்களும் கூட என்பதாகும்.
   (2) வணிகத்தில் முதலீடு செய்யப்பட்ட பணத்தினது இடருக்கு அப்பால் உடைமையாளர்கள் வெளிப்படுத்த மாட்டார்கள் என்பதாகும்.
   (3) வணிகத்தில் முதலீடு செய்தல் இடரற்றது என்பதாகும்.
   (4) வணிகத்தைக் கட்டுப்படுத்துவதில் உடைமையாளர்கள் செல்வாக்குச் செலுத்த முடியாது என்பதாகும்.
   (5) முதலீட்டின் மீதான திரும்பல் (உழைப்பு) உத்தரவாதமுடையது என்பதாகும். (......)

8. ஒரு அங்கீகார வணிகமென்பது,
   (1) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வணிகங்களுக்கிடையிலான ஒரு கூட்டுமுயற்சி என்பதாகும்.
   (2) கம்பனி ஒன்று வேறொரு கம்பனியால் கையகப்படுத்தப்படுதல் (acquisition) என்பதாகும்.
   (3) கம்பனி ஒன்று பல்தேசியக் கம்பனியாக மாற்றப்படுதல் என்பதாகும்.
   (4) தற்போது காணப்படும் வணிகமொன்றின் பெயர், இலச்சினை, வியாபார முறைமை போன்றவற்றைப் பயன்படுத்துதல் என்பதாகும்.
   (5) அரசுக்குச் சொந்தமானதும் அதனால் கட்டுப்படுத்தப்படுவதுமான ஒரு வணிகமாகும். (......)

9. A – ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் B – ஊழியர் எண்ணிக்கை C – விற்பனைப் புரள்வு
   D – சந்தை மூலதனவாக்கம் E – உற்பத்தி முறை
   மேலே காணப்படுபவற்றுள் வணிகமொன்றின் பருமனை அளவிடுவதற்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படுபவை எவை ?
   (1) A, B மட்டும் (2) A, B, C மட்டும் (3) A, B, C, D மட்டும்
   (4) A, B, C, E மட்டும் (5) A, B, C, D, E ஆகிய அனைத்தும் (......)

10. A – நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் B – சேமிப்புக் கணக்குகளின் மீதிகள்
    C – தாள் மற்றும் குற்றி நாணயங்கள் D – கடன் அட்டைகளும் வரவு அட்டைகளும்
    E – வலிதான காசோலைகள்
    மேலே காணப்படுபவற்றுள் அண்மித்த பணமாகக் கருதப்படுவது / கருதப்படுபவை எது / எவை ?
    (1) A, B மட்டும் (2) A, C மட்டும் (3) A, E மட்டும் (4) B, D மட்டும் (5) B மட்டும் (......)

11. பின்வரும் பட்டியலானது இலங்கையில் தொழிற்படும் சில வங்கிகளை எடுத்துக் காட்டுகின்றது.
    A – தேசிய சேமிப்பு வங்கி B – மக்கள் வங்கி
    C – தேசிய அபிவிருத்தி வங்கி D – DFCC வர்த்தன வங்கி
    E – அரச ஈட்டு முதலீட்டு வங்கி F – சனச அபிவிருத்தி வங்கி
    மேற்கூறப்பட்டவற்றுள் உரிமம் பெற்ற விசேட (சிறப்பு) வங்கிகள் எவை ?
    (1) C, E, F மட்டும் (2) A, C, D மட்டும் (3) B, D, E மட்டும் (4) D, E, F மட்டும் (5) A, E, F மட்டும் (......)

12. சிவா என்பவர் தான் வசிக்கும் வீட்டிற்காக ரூபா. 200 000 இற்கு X கம்பனியிடமிருந்து காப்புறுதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொண்டதுடன், ரூபா. 400 000 இற்கு Y கம்பனியிடமிருந்து மற்றுமோர் காப்புறுதிப் பத்திரத்தையும் பெற்றுள்ளார். வீடு தீயினால் சேதமடைந்ததன் காரணமாக ஏற்பட்ட இழப்பு ரூபா. 300 000 ஆகக் கணிப்பிடப்பட்டது. பங்களிப்புத் தத்துவத்தின் பிரகாரம் முறையே X மற்றும் Y கம்பனிகளால் செலுத்தப்படும் இழப்பீடுகள் யாவை ?
    (1) X ரூபா. 200 000, Y ரூபா. 400 000 (2) X ரூபா. 150 000, Y ரூபா. 150 000
    (3) X ரூபா. 200 000, Y ரூபா. 100 000 (4) X ரூபா. 100 000, Y ரூபா. 200 000
    (5) X ரூபா. 200 000, Y ரூபா. 300 000 (......)

13. முகாமையாளர் ஒருவர் பெரிய அளவில் விரிவான தகவலொன்றைத் தொடர்பாடல் செய்ய விரும்புகின்றார். பின்வருவனவற்றுள் இந்நோக்கத்திற்கு மிகவும் பொருத்தமான தொடர்பாடல் முறை யாது ?
    (1) எழுத்திலான ஒரு ஞாபகக் குறிப்பு (Memo) (2) நேருக்கு நேரான கூட்டம்
    (3) அறிவித்தற் பலகை (Notice board) (4) தொலைபேசி
    (5) அறிக்கை (Report) (......)

14. பின்வருவனவற்றுள் இலத்திரனியல் தபாலை ஒரு பரந்தளவிலான இலத்திரனியல் தொடர்பாடல் முறையாகப் பயன்படுத்துவதில் காணப்படும் பிரதிகூலம் யாது ?
    (1) அதிகம் விரைவானதல்ல (2) தனிமை என்ற உணர்வை உருவாக்குதல்
    (3) பின்னூட்டல் இல்லை (4) உயர்ந்தளவிலான கிரயம்
    (5) செய்தியை விளங்கிக் கொள்வதில் உள்ள கடினத்தன்மை (......)

(பக். 3 ஐப் பார்க்க

15. ஒரு இலட்சிய நோக்குக் கூற்று (A mission statement) என்பது
(1) வணிகமொன்றின் நிதித் திட்டமாகும்.
(2) ஊழியர்களுக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்குகளை எடுத்துக் காட்டும் ஒரு ஆவணம் ஆகும்.
(3) வணிகமொன்றின் குறிக்கோள்களை (Objectives) விளக்கும் ஒரு ஆவணமாகும்.
(4) வணிகமொன்றின் ஒட்டுமொத்த நோக்கத்தை (Purpose) விளக்கும் ஒரு ஆவணமாகும்.
(5) வணிகமொன்றின் சந்தைப்படுத்தல் உபாயங்களை விளக்கும் ஒரு ஆவணமாகும். (......)

16. "பயனுறுதி" (effectiveness) என்ற எண்ணக்கருவை விவரிக்கும் மிகச்சிறந்த கூற்றைத் தெரிவு செய்க.
(1) உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றுவதற்கான நிறுவனமொன்றின் ஆற்றல் ஆகும்.
(2) வாடிக்கையாளர்களது தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக உள்ளீடுகளை உற்பத்தித்திறனாகப் பயன்படுத்துவதன் மூலம் அதனுடைய குறிக்கோள்களை அடைந்து கொள்வது தொடர்பான நிறுவனமொன்றின் ஆற்றல் ஆகும்.
(3) உற்பத்திக் கிரயத்தையும், ஏனைய செலவுகளையும் இழிவளவாக்குவதற்கான நிறுவனமொன்றின் ஆற்றல் ஆகும்.
(4) ஒரு குறைந்தளவிலான உள்ளீட்டினூடாக அதிகளவிலான வெளியீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான நிறுவனமொன்றின் ஆற்றல் ஆகும்.
(5) குறுங்கால மற்றும் நீண்டகாலக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான நிறுவனமொன்றின் ஆற்றல் ஆகும். (......)

17. A – குறிப்பான நோக்கங்களையும், குறிக்கோள்களையும் குவிமையப்படுத்துதல்
B – அருமையான வளங்களை உற்பத்தித்திறனாகப் பயன்படுத்துதல்
C – நடைமுறைச் சாத்தியமானதாக இருத்தல்
D – நெகிழ்வுத்தன்மையுடையதாக இருத்தல்
E – காலவோட்டத்துடன் மாற்றமுறும் வேலைச்சூழலின் மீது குவிமையப்படுத்துதல்
F – நிறுவனத்தின் சகல அங்கத்தவர்களுக்கும் விளங்கிக் கொள்ளத்தக்கதாக இருத்தல்
மேற்கூறப்பட்டவற்றுள் திட்டமிடல் தத்துவங்களாகக் கருதப்படுபவை எவை ?
(1) A, B மட்டும்   (2) C, D மட்டும்   (3) C, D, F மட்டும்
(4) A, C, D, E மட்டும்   (5) A, C, D, F மட்டும் (......)

18. பின்வருவனவற்றுள் எந்தச் சூழ்நிலையில் JIT சரக்கிருப்பு கட்டுப்பாட்டு முறைமையானது மிகவும் விரும்பத்தக்கதும் பயனுறுதிமிக்கதும் ஆகும் ?
(1) சரக்கிருப்புக்களின் காலம் கடந்துபோதல் தொடர்பான இடர் உயர்வாகக் காணப்படும்போது
(2) பூகோளமயப்படுத்தலின் செல்வாக்கு உயர்வாகக் காணப்படும்போது
(3) உற்பத்தியாளர்களதும், வழங்குனர்களதும் உறவுமுறை பலவீனமாகக் காணப்படும்போது
(4) வழங்குனர்கள் தொழிற்சாலைக்கு அருகாமையில் காணப்படும்போது
(5) உற்பத்திக்கிரயம் தாழ்ந்த மட்டத்தில் காணப்படும்போது (......)

19. கணினி உதவியுடனான உற்பத்திச் செயன்முறையைச் (CAM) சிறப்பாக விவரிக்கும் கூற்றைத் தெரிவு செய்க.
(1) உற்பத்திப்பொருட்களை வடிவமைப்பதற்குக் கணினிகள் பயன்படுத்தப்படுதல்
(2) உற்பத்திச் செயன்முறையை முகாமை செய்வதற்காகக் கணினிகள் பயன்படுத்தப்படுதல்
(3) சந்தைப்படுத்தலுக்கு உதவுவதன் பொருட்டு இணையம் பயன்படுத்தப்படுதல்
(4) சரக்கிருப்புக் கட்டுப்பாட்டிற்காகக் கணினிகள் பயன்படுத்தப்படுதல்
(5) உற்பத்திப்பொருட்களை வடிவமைப்பதற்கும் உற்பத்திச் செயன்முறையை முகாமை செய்வதற்குமாகக் கணினிகள் பயன்படுத்தப்படுதல் (......)

20. சதீஸ் என்பவர் வெப்தளங்களை உருவாக்குவதற்கான வணிகமொன்றின் உரிமையாளராவார். அதிகளவு எண்ணிக்கையிலான வணிக நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு வெப்தளங்களை வடிவமைத்ததன் மூலம் சதீஸ் மிகவும் பிரபல்யமானார். வணிகத்தில் சதீஸ் பயன்படுத்தும் உற்பத்திமுறை யாது ?
(1) கட்டளை உற்பத்தி (job production)   (2) தொகுதி உற்பத்தி (batch production)
(3) பாய்ச்சல் உற்பத்தி (flow production)   (4) CAM-கணினி உதவியுடனான உற்பத்தி
(5) CIM-கணினி ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்தி (......)

(பக். 4 ஐப் பார்க்க

21. A – உறவுமுறைச் சந்தைப்படுத்தல்
B – நுண்பாகச் (சிற்றின) சந்தைப்படுத்தல்
C – அகச் சந்தைப்படுத்தல்
D – செயற்றிறன் (சமூகப்பொறுப்பு) சந்தைப்படுத்தல் (Performance Marketing)
E – எதிர்ச்செயல் (எதிர்வினைச்) சந்தைப்படுத்தல் (Reactive Marketing)
F – ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைப்படுத்தல்
மேலே தரப்பட்டவற்றுள் முழுமைப் படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் **நான்கு** மாறிகளையும் இனங்காண்க.
(1) A, B, C, D ஆகியன (2) A, C, D, E ஆகியன (3) A, C, D, F ஆகியன
(4) B, C, D, E ஆகியன (5) C, D, E, F ஆகியன (……)

22. விளையாட்டுப் போட்டிகள், கலாசார நிகழ்வுகள் போன்ற பாடசாலை நிகழ்வுகளுக்கு வணிக நிறுவனங்களால் அனுசரணை வழங்கப்படும் சந்தர்ப்பங்களை நீர் காணமுடியும். மேம்படுத்தல் கலவையின் எந்த மாறிக்கு இவ்வகையான அனுசரணைகள் நிகழ முடியும் ?
(1) விளம்பரப்படுத்தலுக்கு
(2) விற்பனை மேம்படுத்தலுக்கு
(3) பொதுசனத் தொடர்புகள் மற்றும் பிரசித்தப்படுத்தலுக்கு
(4) தனியாள் விற்பனைக்கு
(5) இடைத்தொடர்புச் (இடை வினைச்) சந்தைப்படுத்தலுக்கு (Interactive Marketing) (……)

23. A – பண்டக்குறி B – தரம் C – SLS சான்றுப்படுத்தல்
D – பொதிகட்டுதல் E – வடிவமைப்பு F – விசேட அம்சங்கள்
மேற்கூறப்பட்டவற்றுள், உற்பத்திப்பொருளை இனங்காணுதல் எதனால் பாதுகாக்கப்பட முடியும் ?
(1) A, B என்பவற்றால் மட்டும் (2) A, C என்பவற்றால் மட்டும் (3) A, D என்பவற்றால் மட்டும்
(4) A, C, D என்பவற்றால் மட்டும் (5) A, C, D, E, F என்பவற்றால் மட்டும் (……)

24. பின்வருவனவற்றுள் நிதியின் அகமூலமாகக் கருத்திற் **கொள்ளப்படாதது** எது ?
(1) நிறுத்திவைத்த இலாபங்கள் (2) பங்கு வழங்கல்
(3) மேலதிகச் சொத்துக்களை விற்றல் (4) பெறுமானத் தேய்வு ஏற்பாடு
(5) தொழிற்படு மூலதனக் குறைப்பு (……)

25. பின்வரும் இரண்டு கூற்றுகளையும் கருத்திற் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.
1. கம்பனியின் நீண்டகால வளர்ச்சியுடன் பங்குதாரரது குறிக்கோள்கள் சிலவேளைகளில் முரண்படலாம்.
2. பங்குதாரர்கள் உயர்வான பங்கிலாபத்தை எதிர்பார்க்கும் போது நிறுத்திவைத்த இலாபம் குறையும்.
(1) 1 ஆம் கூற்றுச் சரியானது. ஆனால் 2 ஆம் கூற்றுத் தவறானது.
(2) 1 ஆம் கூற்றுத் தவறானது. ஆனால் 2 ஆம் கூற்றுச் சரியானது.
(3) இரண்டு கூற்றுகளும் சரியானவை.
(4) இரண்டு கூற்றுகளும் தவறானவை.
(5) இரண்டு கூற்றுகளுக்குமிடையே எதுவித தொடர்பும் இல்லை. (……)

26. பின்வருவன ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவுசெய்தல் செயன்முறையின் சில படிமுறைகள் ஆகும்.
A – வேலை விளம்பரப்படுத்தலைத் தயாரித்தல்
B – விண்ணப்பதாரிகள் தொடர்பான சுருக்கப் பட்டியலைத் தயாரித்தல்
C – வேலை விவரணத்தைத் தயாரித்தல்
D – நேர்முகப் பரீட்சையை நடத்துதல்
E – வேலை குறித்துரைத்தலைத் தயாரித்தல்
இவற்றை ஒழுங்குமுறையாக வரிசைப்படுத்தினால், சரியான விடையாக அமைவது
(1) A, C, E, B, D ஆகும். (2) C, E, A, B, D ஆகும். (3) C, E,B, A, D ஆகும்.
(4) A, B, E, C, D ஆகும். (5) A, B, D, E, C ஆகும். (……)

27. பின்வருவனவற்றுள் எந்த வரைவிலக்கணம் **தவறானது** ?
(1) அறிமுகப்படுத்தல் = புதிதாக அமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கான வேலைத்தலத்திற்கு வெளியேயான பயிற்சி ஆகும்.
(2) வேலைப் பகுப்பாய்வு = வேலையைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு யார் தேவை என்பதனை இனங்காண்பதற்கான ஒரு கற்கை ஆகும்.
(3) வேலையின் போதான பயிற்சி = வேலைத்தலத்தில் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்கள் ஆகும்.
(4) கூட்டுப் பேரம்பேசல் = ஊழியர் தொழிற் பிரச்சினையின் மீது தொழிற்சங்கத்துக்கும் முகாமைக்கும் இடையேயான கலந்துரையாடல்கள் ஆகும்.
(5) ஆளணியினர் மதிப்பீடு = ஊழியர்களது பயனுறுதியைக் கணிப்பிடுகின்ற செயன்முறை ஆகும். (……)

(பக். 5 ஐப் பார்க்க

28. பின்வருவனவற்றுள் தகவல் முறைமை ஒன்றின் தொழிற்பாடு ஒன்றாகக் **கருதப்படாதது** எது ?
(1) உள்ளீடுகள் (2) பொருத்தப்பாடு (Relevancy) (3) செயன்முறைப்படுத்தல்
(4) வெளியீடுகள் (5) களஞ்சியப்படுத்தல் (......)

29. பின்வரும் அட்டவணையில் X நிரலானது தகவல் முறைமை ஒன்றின் கூறுகளையும் Y நிரலானது அக்கூறுகளுடன் தொடர்புபட்ட உருப்படிகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X : கூறுகள் | Y : உருப்படிகள் |
|---|---|
| A – வன்பொருள் | 1 – விதிகளும் பிரமாணங்களும் |
| B – மென்பொருள் | 2 – மைக்ரோசொப்ட் (Microsoft) |
| C – உயிர்ப்பொருள் | 3 – உற்றுநோக்கி (Monitor) |
| D – நிறுவனப்பொருள் | 4 – பயன்படுத்துனர் (User) |
| E – நடைமுறைகள் | 5 – வின்டோஸ் (Windows) |

X இற்கும் Y இற்கும் பொருந்துகின்ற சரியான இணைப்பைத் தெரிவு செய்க.
(1) A – 3, B – 5, C – 4, D – 2, E – 1
(2) A – 3, B – 2, C – 4, D – 5, E – 1
(3) A – 3, B – 5, C – 4, D – 1, E – 2
(4) A – 3, B – 2, C – 1, D – 5, E – 4
(5) A – 5, B – 3, C – 2, D – 1, E – 4 (......)

30. புதிய வணிகமொன்றை ஆரம்பிக்கும் போது காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல் கூற்றைத் தயாரித்தல் பயனுடையதாகும். இதனைத் தயாரிப்பதன் மூலம் கிடைக்கும் பிரதான அனுகூலமானது
(1) வணிகமானது இலாபத்தன்மையுடன் இயங்குகின்றதா என்பதனை உடைமையாளர் தெரிந்து கொள்ள முடியும்.
(2) உற்பத்தியின் இலாப நட்டமற்ற புள்ளியை (B.E.P.) எடுத்துக் காட்டும்.
(3) வணிகத்தின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் எடுத்துக் காட்டும்.
(4) வணிகத்தின் மூலதனக் கட்டமைப்பை எடுத்துக் காட்டும்.
(5) வணிகத்தின் திரவத்தன்மையை எடுத்துக் காட்டும். (......)

- 31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குப் **பொருத்தமான சொற்களுடன்** வெற்றிடங்களை நிரப்பி விடை எழுதுக.

31. (அ) தனிப்பட்டவர்களது நம்பிக்கைகள், பெறுமானங்கள் மற்றும் நியமங்கள் (Beliefs, Values and Norms) .................................................. சூழல் காரணிகளாகக் கருதப்படும்.

(ஆ) வணிகமொன்றிற்கான ஒழுக்கங்கள் பிரசுரிக்கப்படும் போது, அவை .................................................. என அழைக்கப்படும்.

32. (அ) உலக நுகர்வோரது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு .................................................................................................................................. என அழைக்கப்படும்.

(ஆ) இவ்வமைப்பினால் உலக நுகர்வோர் தினமாக........................................ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

33. (அ) வரையறுத்த கம்பனி ஒன்றின் சட்ட ஆளுமையானது (Legal entity) கம்பனிச் சட்டத்தின் மூலமும் .................................................. மூலமும் உருவானதாகும்.

(ஆ) பங்குடைமை ஒன்றின், வணிக நடவடிக்கைகளில் பங்குபற்றாத மற்றும் பொதுமக்களுக்குத் தெரியாத பங்காளர் ஒருவர்.................................................... என அழைக்கப்படுவார்.

34. (அ) நபர் ஒருவர் எப்பொழுதும் ஒரே விதமான மனப்பான்மையுடன் சிந்தித்துச் செயற்படுவாராயின், அது முயற்சியாண்மையின் முன்னேற்றத்துக்கு ஒரு அச்சுறுத்தலாக அமையும். இத்தனிப்பட்ட சிறப்பியல்பானது ................................................................. என அழைக்கப்படும்.


(ஆ) "முன்மாதிரிகள், அனுபவங்கள், கல்வி, குடும்பம்" ஆகிய காரணிகளுள், தனிப்பட்ட காரணிகள் ............................................................................. என்பனவாகும்.

(பக். 6 ஐப் பார்க்க

**35.** (அ) இலங்கையில் காணப்படும் இரண்டு கடன் தரப்படுத்தல் (Credit rating) கம்பனிகள் ..........................................
உம் ................................................... உம் ஆகும்.

(ஆ) வங்கிகளுக்கிடையிலான காசோலைத் தீர்ப்பனவு நடவடிக்கைகள் ..........................................................
இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**36.** (அ) பின்வரும் வெற்றுக் கூடுகளைப் பொருத்தமான சொற்களை இடுவதன் மூலம் பூரணப்படுத்துக.





(ஆ) ஒரேவகையான பொருட்களை விற்பனை செய்வதற்காகப் பல்வேறு இடங்களிலும் கிளைகளைக் கொண்டமைந்து காணப்படுகின்ற கடைகள் ....................................................... என அழைக்கப்படும்.

**37.** (அ) கீழுள்ள ஊழியர்கள் குறித்தவொரு முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பதனை எடுத்துக்கூறும் எண்ணக்கரு ...................... .............................. ஆகும்.

(ஆ) நெறிப்படுத்தல் செயன்முறையானது பிரதானமான **மூன்று** பகுதிகளை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. அவையாவன
1. .................................... 2. .................................... 3. ....................................என்பனவாகும்.

**38.**




The National e-learning Portal for The General Education

மேலேயுள்ள வரைபடத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உற்பத்திப்பொருள் வாழ்க்கைச் சக்கரத்தின் (சகடவோட்டத்தின்) **நான்கு** கட்டங்களும் 1. .................................... 2. ....................................
3. .................................... 4. ....................................என்பனவாகும்.

**39.** (அ) உடைமையாளர் மூலதனத்திற்கும் (உரிமையாண்மை) கடன் மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பு ............................................ என அழைக்கப்படும்.

(ஆ) பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகள் தொடர்பாகக் காணப்படும் ஒரு தொடர்ச்சியான அதிகரிப்பு காளைகள் சந்தை (bull market) என அழைக்கப்படும். பங்குகளின் விலைகள் தொடர்பாகக் காணப்படும் ஒரு தொடர்ச்சியான வீழ்ச்சி ....................... .............................. சந்தை என அழைக்கப்படும்.

**40.** (அ) நிறுவனமொன்றில் காணப்படும் பதவிகளின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கான அறிவித்தலொன்றை அந்நிறுவனம் அலுவலகத்தின் முன்பாகக் காணப்படும் அறிவித்தற் பலகையில் காட்சிப்படுத்தியது. இந்த அறிவித்தலானது ஒரு ......................................... மூலமாகக் கருதப்படும்.

(ஆ) குறித்தவொரு காலத்துக்கான ஊழியர் உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையிலான தொடர்பு ................................................................. என அழைக்கப்படும்.

(பக். 7 ஐப் பார்க்க

● **41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்கு **மிகவும் பொருத்தமான விடைகளைத்** தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

**41.** நுகர்வுப் பொருட்களை **நான்கு** பிரிவுகளாக வகைப்படுத்த முடியும். அவை எவை ?

1. ............................................................ 2. ............................................................

3. ............................................................ 4. ............................................................

**42.** வணிகமொன்றின் பணிச்சூழல் விசைகளில் (Task Environmental Forces) **ஒன்றாக** வாடிக்கையாளர்களைக் குறிப்பிட முடியும். ஏனைய **நான்கு** விசைகளும் எவை ?

1. ............................................................ 2. ............................................................

3. ............................................................ 4. ............................................................

**43.** (அ) இலங்கைக்கு வெளியே மட்டும் வணிகத்தை மேற்கொள்வதற்காகக் கூட்டிணைக்கப்படும் கம்பனி ஒன்றை அழைக்கப் பயன்படும் பதம் யாது ?

........................................................................................................................

(ஆ) இலங்கையின் தேசிய மட்டத்திலான கூட்டுறவு அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ள பெயர் யாது ?

........................................................................................................................

**44.** பின்வருவனவற்றுள் ஒரு முயற்சியாண்மை சார்ந்த சிறப்பியல்புகளாகக் கருதப்படக்கூடிய சொற்களின் கீழ் கோடிடுக.

● தொடர்பாடல் ● உருவாக்கற்றிறன் (creativeness) ● கற்பனாசக்தி

● நம்பிக்கைகளும் பெறுமானங்களும் ● தன்னம்பிக்கை ● தலைமைத்துவம்

● வாய்ப்புக்களைத் தேடுபவர் ● முகாமைத்துவம்

**45.** கடனட்டைக் கொடுக்கல்வாங்கலில் நான்கு தரப்பினர் சம்பந்தப்பட்டுள்ளனர். **அந்நான்கு** தரப்பினரையும் குறிப்பிடுக.

1. ............................................................ 2. ............................................................

3. ............................................................ 4. ............................................................

**46.** (அ) இலங்கையில் மிக அண்மையில் (2013 மார்ச்) திறந்து வைக்கப்பட்ட சர்வதேச விமான நிலையத்தின் பெயர் யாது ? (விமான நிலையத்தின் முழுப் **பெயரையும்**, **அமைவிடத்தையும்** எழுதுக.)

........................................................................................................................

(ஆ) இதற்கும் மேலதிகமாக, இலங்கையில் செயற்படும் மற்றைய சர்வதேச விமான நிலையம் யாது? (விமான நிலையத்தின் முழுப் **பெயரையும்**, **அமைவிடத்தையும்** எழுதுக.)

........................................................................................................................

**47.** (அ) வினைத்திறனை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அளவீடு யாது ?

........................................................................................................................

(ஆ) வணிகமொன்றின் மொத்த நிலையான கிரயம் ரூபா. 40 000 ஆகும். ஒரு அலகுக்கான விற்பனை விலை ரூபா. 80 ஆகும். ஒரு அலகுக்கான மாறும் கிரயம் ரூபா. 40 ஆகும். இவ்வணிகத்தின் இலாப நட்டமற்ற உற்பத்தி அலகு யாது ?

........................................................................................................................

**48.** நுகர்வோரது குணாதிசயங்கள் மற்றும் நுகர்வோரது பிரதிபலிப்புக்களின் பிரகாரம் ஒரு சந்தையைத் துண்டமாக்குவதற்குப் பயன்படும் காரணிகளை நான்கு தொகுதிகளாக வகைப்படுத்த முடியும். **அந்நான்கு** காரணிகளும் எவை ?

1. ............................................................ 2. ............................................................

3. ............................................................ 4. ............................................................

(பக். 8 ஐப் பார்க்க

49. (அ) கம்பனியின் பங்குகளை வாங்குவதற்காக ஒரு முதலீட்டாளருக்கு இரண்டு தெரிவுகள் காணப்படுகின்றன. அந்த **இரண்டு** தெரிவுகளையும் குறிப்பிடுக.

1. ................................................................................................................

2. ................................................................................................................

(ஆ) ஊழியர் பதவி உயர்வில் **இரண்டு** முறைசார்ந்த நியதிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை எவை?

1. ................................................................................................................

2. ................................................................................................................

50. (அ) இணையத்தினூடாகத் தகவல்களைத் தேடுவதற்குப் பயன்படுத்தப்படும் மிகவும் பிரபல்யமான **இரண்டு** தேடுதற் பொறிகளைக் குறிப்பிடுக.

1. ................................................................................................................

2. ................................................................................................................

(ஆ) தகவல் முறைமைகள் நான்கு மட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன. **அந்நான்கு** மட்டங்களும் எவை ?

1. ................................................................................................................

2. ................................................................................................................

3. ................................................................................................................

4. ................................................................................................................

❊ ❊ ❊

The National e-learning Portal for The General Education

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



13112

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ව්‍යාපාර අධ්‍යයනය II
வணிகக் கல்வி II
Business Studies II

32 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

※ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

1. (i) **"வூட்மாஸ்ரர்"** என்பது பாரிய அளவில் தளபாடங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு வணிகமாகும். இவ்வணிகமானது வீடு மற்றும் அலுவலகத்துக்குத் தேவையான பல்வேறு விதமான மரத்தளபாடங்களையும் தயாரிக்கின்றது.

    (அ) வூட்மாஸ்ரர் நிறுவனத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

    (ஆ) வூட்மாஸ்ரர் உற்பத்திப்பொருட்களை நுகர்வுப்பொருட்களாகவும், மூலதனப் பொருட்களாகவும் வகைப்படுத்தமுடியுமா? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

    (ii) வணிக நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட **ஆறு** தொழிற்பாடுகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

    (iii) சில வணிகங்கள் பங்குதாரர் என்ற எண்ணக்கருவில் இருந்து அக்கறையுடைய தரப்பினர் என்ற எண்ணக்கருவுக்குத் தமது பாதையை ஏன் மாற்றியுள்ளன என விளக்குக. (04 புள்ளிகள்)

    (iv) நவீன வணிகத்தின் ஒரு பொதுவான சிறப்பம்சம் சிறப்புத் தேர்ச்சி ஆகும். சிறப்புத்தேர்ச்சியின் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

    (v) உமக்குத் தெரிந்த வணிக நிறுவனமொன்றைக் கருத்திற் கொள்வதன் மூலம், அந்நிறுவனம் எவ்வாறு சமூகப்பொறுப்பு என்ற எண்ணக்கருவுக்குப் பங்களிப்பு செய்கின்றது என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

    (மொத்தம் 20 புள்ளிகள்)

2. (i) இலங்கை அரசு இந்நாட்டு வணிகத்துறையின் அபிவிருத்தியின் மீது செல்வாக்குச் செலுத்தும் **நான்கு** வழிமுறைகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

    (ii) (அ) தரம் (standard) என்ற எண்ணக்கருவை விளக்குக.

    (ஆ) தேசிய தரக் கொள்கையை அமுல்படுத்துவதனால் ஒரு நாடு அடைந்து கொள்ளக்கூடிய அனுகூலங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

    (iii) தனது தந்தையாரினால் நீண்டகாலமாக நடத்தி வரப்பட்ட மரபுரீதியான உணவு வணிகமொன்றை ரமணி என்பவள் கையேற்றுக் கொண்டாள். அவ்வணிகத்துக்குச் சில நவீனமயப்படுத்தல்களை அவள் அறிமுகப்படுத்திய துடன் பழச்சாறை விற்பனை செய்வதற்காக தனித்த ஒரு பிரிவையும் உருவாக்கினாள். அவளது விற்பனையும் இலாபமும் அதிகரித்தது. ஆனால், மேற்பார்வை செய்வது தொடர்பாக ரமணியின் அக்கறையற்ற நடவடிக்கை காரணமாக அவ்வணிகமானது படிப்படியாகக் கீழ்நோக்கிச் சென்றது. இதன் விளைவாக முகாமை மற்றும் நிதி தொடர்பாகப் பிரச்சினைகள் தோன்றியதுடன் முடிவில் அவள் கடன் தீர்க்க முடியாத நிலைக்குத் (Bankruptcy) தள்ளப்பட்டாள்.

    (அ) ரமணியின் வணிகத்தினது வெளியீட்டை பொருட்களாகவா, சேவைகளாகவா கருத முடியும் ?

    (ஆ) உமது விடையின் பிரகாரம், இப்பொருட்கள் அல்லது சேவைகளில் என்ன விசேடத்துவத்தை நீர் காண்கின்றீர் ? விளக்குக.

    (இ) இங்கு தரப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரமணியினுடைய வணிக நிறுவனம் எவ்வகையானது ?

    (ஈ) ரமணியின் வணிகத்தை உதாரணமாகக் கொண்டு, "வரையறுக்கப்படாத பொறுப்பு" என்பதனால் கருதப்படுவது யாது ? என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

    (iv) தகுதி வாய்ந்த கணக்காளர்களான ஆதர், பேர்ட்டி, சாள்ஸ் ஆகியோர் கணக்கீட்டு நிறுவனமொன்றை பங்குடைமை வணிகமாக ஆரம்பித்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் கணக்கீட்டுத் துறையில் வித்தியாசமான விசேடத்துவங்களைக் கொண்டிருந்தனர். ஆரம்பத்தில் இவர்கள் சம அளவிலான தொகையை மூலதனமாக ஈடுபடுத்தியிருந்தனர். இவர்களது மேற்பார்வையின் கீழ் ஒரு செயலாளரும் சில எழுதுவினைஞர்களும் கடமையாற்றுகின்றார்கள். இவ்வணிகத்தின் முன்னேற்றமானது சில வருடங்களுக்கு மிகவும் சிறப்பாகக் காணப்பட்டது. துரதிஷ்டவசமாக முரண்பாடு தோன்றியதன் காரணமாக பேர்ட்டி விலகிக் கொள்வதற்குத் தீர்மானித்தார். இறுதியில் அவர்கள் தமது வணிகத்தைக் கலைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆனால், வணிகத்தின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் எவ்வாறு பகிர்ந்து கொள்வதென்பதே அவர்களது தற்போதைய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

[பக். 2 ஐப் பார்க்க

(அ) இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டதன்படி, பெரும்பாலான பங்குடைமைகள், சேவை வழங்கும் வணிகங்களாக ஏன் காணப்படுகின்றன. என விளக்குக.

(ஆ) இவ்வாறான தோல்வியைத் தவிர்ப்பதற்கு பங்குடைமையின் ஆரம்பத்தில் என்ன செய்திருக்க வேண்டும் என விளக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் பிரகாரம், வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றின் சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் முதலீட்டாளர் ஒருவர் என்ன உரிமைகளைப் பெறுகின்றார் ?

(ஆ) வரையறுத்த கம்பனி ஒன்றைப் பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்களுள், அமைப்பு அகவிதி மிகவும் முக்கியமானதாகும். கம்பனி நடவடிக்கைகள் மீது அமைப்பு அகவிதி எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. (i) சாதாரண வணிகர் ஒருவருடன் ஒப்பிடும் போது முயற்சியாளர் ஒருவரில் நீர் காணக்கூடிய வேறுபாடுகள் எவை? (04 புள்ளிகள்)

(ii) சிற்றளவு வணிகங்களின் அபிவிருத்தியை முன்னேற்றுவதற்குப் பெரும்பாலான நாடுகளின் அரசாங்கங்கள் மிகவும் அக்கறையுடையனவாகக் காணப்படுகின்றன. இலங்கையின் பொருளாதாரத்தைக் கருத்திற் கொண்டு இதற்கான காரணங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) அண்மையில் இளைப்பாறிய உமது உறவினர் ஒருவர் தமது ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து ரூ. 3 மில்லியன்களைப் பெற்றுக் கொண்டார் எனக் கருதுக. தற்போது, இப்பணத்தை நிதிக்கம்பனி ஒன்றின் நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்ய வேண்டுமென அவர் கருதுகின்றார். பொருத்தமான நிதிக்கம்பனி ஒன்றைத் தெரிவு செய்வதற்காக, நீர் அவருக்கு எவ்வாறான அறிவுரைகளை வழங்குவீர்? (04 புள்ளிகள்)

(iv) (அ) "A" என்பவரைப் பணம் பெறுபவராகக் கொண்டு அவரின் பெயருக்கு எழுதப்பட்ட கட்டளைக் காசோலை ஒன்றினை "B" களவாடி "A" யின் கையொப்பத்தை மோசடியாக இட்டதுடன் அதனைப் புறக்குறிப்பிட்டு "C" இற்கு வழங்கி, அதற்கான பணப்பெறுமதியைப் பெற்றுக்கொண்டார். "C" அதனை மிக்குயர் நம்பிக்கையுடன் பெற்றுக்கொண்டார். "C" காலகதியில் இக்காசோலைக்கு உரித்துடையவரா (holder in due course)? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(ஆ) காசோலை ஒன்றுக்கு குறுக்குக் கோடிடக் கூடிய தரப்பினரைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) (அ) இலத்திரனியல் பணக் கொடுக்கல்வாங்கல்களில் ஒரு அதிகரிப்பையும் காசு மற்றும் காசோலைக் கொடுக்கல்வாங்கல்களில் ஒரு வீழ்ச்சியையும் காணக்கூடியதாகவுள்ளது. இலத்திரனியல் பணப் பாவனையில் அதிகரிப்புக் காணப்படுவதற்கான காரணங்கள் எவை ?

(ஆ) வரவு அட்டை ஒன்றுக்கும் கடன் அட்டை ஒன்றுக்கும் இடையிலான ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் எவை ? (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4. (i) (அ) தனஸ்ரீ என்பவர் தனது மனைவியின் மீது ஒரு முழுமையான ஆயுளுறுதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொண்டார். பின்னர் ஒரு கட்டத்தில் மனைவி, தனஸ்ரீயிடமிருந்து விவாகரத்தைப் பெற்றுக்கொண்டார். சில காலத்தின் பின்னர் அவள் இறந்து விட்டாள். காப்புறுதி செய்யப்பட்ட அத்தொகையைத் தனஸ்ரீக்குக் கொடுப்பதற்கு அக்காப்புறுதிக் கம்பனி பொறுப்புடையதா ? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(ஆ) தீ இடர் நீங்கலாக, ஒன்றின் பின் ஒன்றாக ஏற்படும் இழப்புக்களுக்கான காப்புறுதிப் பத்திரம் ஒன்றின் (Consequential loss policy) ஊடாகக் காப்புறுதி செய்யக்கூடிய இடர்கள் எவை ? (04 புள்ளிகள்)

(ii) (அ) வாய்மொழி மூலமான தொடர்பாடல் முறைகளைக் குறிப்பிட்டு, அத்தொடர்பாடலின் அனுகூலங்களை விளக்குக.

(ஆ) "முறைசாராத் தொடர்பாடல்" என்பதால் கருதப்படுவது யாது என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பின்வருவன இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் சில ஆவணங்கள் ஆகும். ஒவ்வொரு ஆவணத்தினதும் நோக்கத்தை விளக்குக.

(அ) வார்நாமம்

(ஆ) நாணயக்கடிதம்

(இ) உற்பத்திநாட்டுச் சான்றிதழ்

(ஈ) இறக்குமதிக் குறிப்பு (04 புள்ளிகள்)

(iv) "இலத்திரனியல் வர்த்தகத்தின் மூலம் நுகர்வோரும் வணிகர்களும் மட்டுமன்றி முழுச் சமூகமும் நன்மையைப் பெற்றுக் கொள்கின்றது." சமூகம் தொடர்பில் இலத்திரனியல் வர்த்தகத்தின் நன்மைகளை ஆராய்க. (04 புள்ளிகள்)

(v) ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு போக்குவரத்தின் வகிபாகத்தை விளக்குக. (04 புள்ளிகள்)


(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க


பகுதி II

5. (i) பின்வருவன இரண்டு வணிக நிறுவனங்களின் அமைப்பு வரைபடங்கள் ஆகும்.

**A**




**B**




"A" ஆனது நிலைக்குத்தான அமைப்பு வரைபடத்தையும் "B" ஆனது கிடையான அமைப்பு வரைபடத்தையும் கொண்டதாகும். நிறுவனம் சார்ந்த தத்துவங்களின் பிரகாரம் இந்த இரண்டு அமைப்பு வரைபடங்களினதும் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் எடுத்துக்காட்டுக. (04 புள்ளிகள்)

(ii) கருணைதாசன் ஒரு பாடசாலை அதிபராவார். பாலதாசனும் ஒரு பாடசாலை அதிபராவார். கருணைதாசன் அதிகாரம் மற்றும் பொறுப்புக்களைத் தனது பிரதிஅதிபர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்களுக்குக் கையளித்திருந்தார். அவர் தீர்மானங்களை எடுக்கும் போது, எப்பொழுதும் ஆசிரியர் குழாத்தினது கருத்துக்களை மட்டுமன்றி மாணவர்களின் கருத்துக்களையும் கவனத்திற் கொண்டார். ஆனால், பாலதாசன் தனது அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் கையளிக்காது தன்னிடமே வைத்துக் கொண்டார். அவர் சகல தீர்மானங்களையும் தன்விருப்பப்படி எடுத்துக் கொண்டார்.

(அ) கருணைதாசன், பாலதாசன் ஆகியோரது தலைமைத்துவப் பாங்குகளை (Leadership Styles) வெவ்வேறாகக் குறிப்பிடுக.

(ஆ) அவற்றுள் மிகவும் பயனுறுதிமிக்க தலைமைத்துவப் பாங்கு எது என்பதைக் காரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) "கற்றலை இலகுபடுத்துவதற்காக, முகாமைத்துவச் செயன்முறைகள் நான்கு தொழிற்பாடுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் இத்தொழிற்பாடுகள் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை ஆகும்." இக்கூற்றை ஆராய்க. (04 புள்ளிகள்)

(iv) விசுவர் என்பவர் மரபுரீதியான கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளர் ஆவார். இவர் வாடிக்கையாளர்களின் கட்டளைகளினை அடிப்படையாகக் கொண்டு தனது உற்பத்திகளைத் தொடர்ந்தார். அவரது உற்பத்திப்பொருட்களுக்கான கேள்வியில் ஒரு மெதுவான அதிகரிப்பு காணப்பட்டது. இதனால் விசுவர் தனது உற்பத்தி முறையை கட்டளை உற்பத்தியில் இருந்து பாய்ச்சல் உற்பத்திக்கு மாற்ற உத்தேசித்தார்.

(அ) கட்டளை உற்பத்தியில் இருந்து பாய்ச்சல் உற்பத்திக்கு மாறுவதன் மூலம் விசுவர் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் ?

(ஆ) மிகவும் பொருத்தமான உற்பத்தி முறையைத் தெரிவு செய்யும் போது விசுவர் கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(v) (அ) "உற்பத்தி நிறுவனமொன்றிற்கான தரக்கட்டுப்பாட்டு செயன்முறை என்பது முடிவுப் பொருட்களைப் பரிசோதிப்பது மட்டுமே ஆகும். " மேற்கூறிய கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா ? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(ஆ) உற்பத்திக் கம்பனி ஒன்று தனது தொழிற்சாலைக்குப் பொருத்தமான இடஅமைவைத் தெரிவு செய்யும் போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

13112

6. (i) ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது தொடர்பில் அதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவு (Proposal) ஒன்றை ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையாளர் சமர்ப்பித்திருந்தார். ஆனால் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள் மீது பணத்தைச் செலவிடுவது பயனற்றதெனவும் அப்பணத்தை மேலும் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகள் மீது செலவு செய்தால் நிறுவனத்தின் சந்தைப்பங்கை அதிகரித்துக்கொள்ள உதவியாக இருக்குமெனவும் கூறி நிதி முகாமையாளர் அம்முன்மொழிவை எதிர்த்து வாதிட்டார். நிதி முகாமையாளரின் கூற்றுக்கு எதிராக உம்மால் என்ன கூறமுடியும் ? விளக்குக.

(04 புள்ளிகள்)

(ii) (அ) சந்தைப்படுத்தல் கலவை மாறி என்ற வகையில் விநியோகத்தின் (இடம்) முக்கியத்துவத்தை விளக்குக.

(ஆ) பொருத்தமான விநியோக வழிமுறையைத் தெரிவு செய்யும்போது சந்தைப்படுத்தும் ஒருவரால் கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) சந்தைக்குப் பொருளொன்றை வழங்கும் போது அதன் விலை தீர்மானிக்கப்படுதல் வேண்டும். பொருளொன்றுக்குப் பொருத்தமான ஒரு விலையைத் தீர்மானிக்கும் போது சந்தைப்படுத்தும் ஒருவரால் கருத்திற் கொள்ளப்படவேண்டிய காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) அழகு நிலையம் (Beauty Parlour Saloon) ஒன்றை நடத்தி வரும் அருணி என்பவள், இந்நிலையம் தொடர்பில் ஒரு விளம்பரப்படுத்தல் பிரச்சாரமொன்றை அறிமுகப்படுத்தத் திட்டமிடுகின்றாள். இந்நோக்கத்திற்காக அவள் பின்வரும் ஊடகங்களில் இருந்து ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

* தொலைக்காட்சி
* வானொலி
* பெண்கள் சஞ்சிகை
* சிறுவெளியீடுகள் (Brochures)
* இணையத்தளம்
* ஞாயிறு புதினப்பத்திரிகை

அருணி தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு உதவக்கூடிய வகையில் மேலுள்ள ஊடகங்களின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஒப்பிட்டுக் காட்டத்தக்கதாக அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக. (04 புள்ளிகள்)

(v) "அளவுக்கு அதிகமான காசைக் கையில் வைத்திருக்க வேண்டாம். தேவையான அளவு காசைக் கையில் வைத்திருக்கவும்" மேற்கூறிய கூற்று வணிகமொன்றுக்கு ஏன் முக்கியமானது என விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

7. (i) பீற்றர் என்பவர் சில்லறை வியாபாரம் ஒன்றின் உரிமையாளராவார். மிக அண்மையில் அதன் சுற்றுவட்டாரத்தில் சனத்தொகை அதிகரிப்பு ஏற்பட்டது. இதன் விளைவாக இவரது வாடிக்கையாளர் எண்ணிக்கையிலும் ஒரு விரைவான அதிகரிப்பு ஏற்பட்டது. ஆகையால், தனது வியாபாரத்தை ஒரு சிறிய சிறப்புச் சந்தையாக (Mini Super Market) மாற்றியமைக்க அவர் தீர்மானித்தார். இதற்காகக் கட்டடத்தை விரிவுபடுத்துவதற்குத் தனது நிறுத்தி வைத்த இலாபத்தையும், தேவையான பொருட்களை வாங்குவதற்கு வங்கிக்கடனை அல்லது வியாபாரக் கடனையும் பயன்படுத்துவதற்கு அவர் தீர்மானித்தார்.

(அ) பீற்றரின் வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக நிறுத்தி வைத்த இலாபத்தைப் பயன்படுத்துவதன் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பரிசீலிக்குக.

(ஆ) பொருட்களை வாங்குவதற்காக வங்கிக்கடன் அல்லது வியாபாரக் கடனை எடுப்பது தொடர்பில் ஒப்பீட்டு ரீதியான அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) "இலாபத்துக்கும் (profit)" "இலாபத்தன்மைக்கும் (profitability)" இடையிலான வேறுபாட்டை விளக்குக.

(ஆ) ஒரு நிதி மூலம் என்ற வகையில் கடன் காரணிப்படுத்தலை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) நிறுவன இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஏற்றதாக மனித வள முகாமைத்துவமானது எந்தளவுக்கு பங்களிப்புச் செய்ய முடியும் ? கலந்துரையாடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) வணிக நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமையாளர் ஒருவருக்கான வெற்றிடம் ஒன்று காணப்பட்டது. இப்பதவிநிலையை உள்வாரியாகவா அல்லது வெளிவாரியாகவா ஆட்சேர்ப்பு செய்வது என்பது தொடர்பாக நிறுவன முகாமையானது தீர்மானிக்க வேண்டியுள்ளது. இவ்விரு மூலங்களினதும் அனுகூலங்களைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(ஆ) வணிகமொன்றிற்கான சிறந்த ஊழியர் உறவின் ஊடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் யாவை ? (04 புள்ளிகள்)

(v) குறித்தவொரு வேலை வெற்றிடம் தொடர்பாக விண்ணப்பிக்கும்போது அவர்களது விண்ணப்பப் படிவத்துடன் சுயவிபரக் கோவையையும் (C.V) சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகளிடம் பெரும்பாலான நிறுவனங்கள் வேண்டுகின்றன. சுயவிபரக் கோவை ஒன்றில் உள்ளடங்க வேண்டிய அத்தியாவசியமான தகவல்களைக் குறிப்பிடுக.

**கவனிக்கவும் : உமது சொந்தப்பெயர் முகவரியைப் பயன்படுத்த வேண்டாம்.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

8. (i) "வணிகத்துறையின் புரட்சிகரமான மாற்றங்களுக்கு இணையமானது மிகவும் உறுதுணையாகவுள்ளது." மேற்கூறிய கூற்றுத் தொடர்பாக உமது கருத்துக்களைத் தருக. (04 புள்ளிகள்)

(ii) (அ) தகவல் முறைமை என்றால் என்ன என்பதை விளக்குக.

(ஆ) சிறந்த தகவல் ஒன்று அவசியமாகக் கொண்டிருக்க வேண்டிய **நான்கு** சிறப்பியல்புகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை (TPS), அலுவலகத் தன்னியக்க முறைமை (OAS) ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் **இவ்விரண்டு** கணினி நிகழ்ச்சித் திட்டங்களைத் தனித்தனியாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) புதிய வணிகமொன்று வங்கிக்கடனைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கும்போது வங்கி முகாமையாளர்கள் அதன் வணிகத் திட்டத்தைப் பரிசிலிப்பதற்கு அக்கறையுடையவர்களாகக் காணப்படுவதற்கான காரணத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) பின்வருவது வணிகத் திட்டமொன்றின் 2014 ஜனவரி, பெப்ருவரி மாதங்களுக்கான காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல் கூற்றில் இருந்து பிரித்தெடுத்த தகவல்கள் ஆகும்.

| வருடம் 2014 | ஜனவரி (ரூ. 000) | பெப்ருவரி (ரூ. 000) |
|---|---|---|
| **காசு உட்பாய்ச்சல்கள்** | | |
| காசு விற்பனைகள் | 60 | 80 |
| கடன் பட்டோரிடமிருந்து பெற்றவை | 20 | (A) ? |
| வங்கிக்கடன் | (B) ? | 60 |
| உள்ளே வந்த மொத்தக் காசு | 130 | 170 |
| **காசு வெளிப்பாய்ச்சல்கள்** | | |
| சரக்கிருப்பு | 70 | (C) ? |
| வாடகை | 10 | 10 |
| வட்டி | 5 | 6 |
| சம்பளம் | 8 | 10 |
| ஏனைய செலவுகள் | 30 | 40 |
| வெளியே சென்ற மொத்தக் காசு | 123 | 146 |
| தேறிய காசுப்பாய்ச்சல் | (D) ? | (E) ? |
| ஆரம்ப மீதி | 3 | (F) ? |
| இறுதி மீதி | (G) ? | (H) ? |

**A, B, C, D, E, F, G, H** ஆகியவற்றுக்குப் பெறுமதிகளை உட்படுத்துவதன் மூலம் மேலே உள்ள காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல் கூற்றைப் பூரணப்படுத்துக.

(மேற்கூறிய காசுப் பாய்ச்சற் கூற்றை மீண்டும் தயாரிக்க வேண்டிய அவசியமில்லை) பின்வருவனவற்றிற்கான பெறுமதிகளை மட்டும் தருக.

உ+ம் :-

A = ........................................ B = ........................................

C = ........................................ D = ........................................

E = ........................................ F = ........................................

G = ........................................ H = ........................................

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

❊ ❊ ❊